பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 22 திங்கட்கிழமை 07.12.2020 கதிர் 262

## லொறி - மோட்டார் சைக்கிள் மோதி விபத்து; இருவர் பலி!

எம்லிப்பிட்டிய 100 ஆம் கட்டப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### கொரோனாத் தொற்றுப் பரவல் தொடர்பில்

# மக்கள் அச்சமடையத் தேவையில்லை; இம்மாத இறுதிக்குள் கட்டுப்பாட்டுக்குள்

### இராணுவத் தளபதி திட்டவட்டம்



கொரோனா வைரஸின் தற்போதைய நிலையில் மேல் மாகாணம் முழுமையாக முடக்கப்படாது என்று கொரோனாத் தடுப்புக்கான செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

எனினும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் பகுதிகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்படும் என்றும், தனிமைப்படுத்தல் குறித்து மேல் மாகாணத்தில் உள்ள மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மக்கள் சுகாதார வழிகாட் டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று

2

## கிழக்கில் மேலும் 45 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

### மொத்தப் பாதிப்பு 393 ஆக உயர்வு



கிழக்கு மாகாணத்தில் இன்று மட்டும் 45 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் அழகையாலதாகரன் தெரிவித்தார்.

2

# வடக்கில் தொடருகின்ற சீரற்ற காலநிலையால் 91 ஆயிரம் பேர் பாதிப்பு; 3,500 வீடுகள் சேதம்!!

வடக்கு மாகாணத்தில் தொடரும் சீரற்ற காலநிலையால் 27 ஆயிரத்து 613 குடும்பங்களைச் சேர்ந்த 91 ஆயிரத்து 22 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3,576 குடும்பங்களைச் சேர்ந்த 11,000 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இம்மாகாணத்தில் 98 வீடுகள் முழுமையாகவும், 3,414 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரையில் 23 ஆயிரத்து 304 குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரத்து 570 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார். அத்துடன் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாவட்டத்தில் கடுமையான காற்று மற்றும் வெள்ளத்தால் 93 வீடுகள் முழுமையாகவும், 2,969 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

2

# வலி கிழக்கு தவிசாளரைக் கைது செய்வதற்கு பொலிஸார் மும்முரம்

### அங்கஜன் நாட்டி வைத்த பெயர்ப்பலகையை அகற்றி அரச சொத்தை சேதப்படுத்தினார் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெம்பர் 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷைக் கைதுசெய்வதற்குப் பொலிஸார் பிரதேச சபை அலுவலகத்தில் நீண்ட நேரம் காத்திருந்தும் தவிசாளர் சபைக்கு வருகை தராததால் அவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் அனுமதி பெறப்படாது பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியைப் புனரமைக்க யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலானவர்கள் அடிக்கல்லை நாட்டி வைத்து அங்குரார்ப்பணம் செய்து வைத்த அபிவிருத்தி அதிகார சபையின் பெயர்ப்பலகையை வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அகற்றிய நிலையில் பொலிஸாரால் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது.

2

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை மார்ச் மாதம் 1 முதல் 11 வரை

### கல்வி அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு



ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறும் என்று கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

சாதாரண தரப் பரீட்சை மார்ச் மாதமளவில் நடைபெறும் என முன்னரே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில்,

2

## தவிசாளர் நிரோஷின் முன் பிண மனுவை புதனுக்கு திகதியிட்டது மல்லாகம் மன்று

யாழ்ப்பாணம்,டிசெ.07

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை பொலிஸார் கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடக் கோரும் எதிர்பார்க்கைப் பிணை விண்ணப்பத்தை நாளைமறுதினம் புதன்கிழமை பரிசீலனைக்கு ஒத்திவைத்த மல்லாகம் நீதிமன்றில் அச்சுவேலிப் பொலிஸாருக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அச்செழு அம்மன் கோவில் வீதியை சீரமைக்கும் பணியை ஆரம்பித்து நடப்பட்ட

2

## மஹர சிறை சம்பவம்: அறிக்கை சமர்ப்பிப்பு



மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கை இன்று பிற்பகல் 3.00 மணியளவில் நீதி அமைச்சர்

2

## புதிதாக மேலும் 10 ஆஸ்பத்திரிகளில் தொற்றுச் சோதனை

நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை 20,000 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சின் இரசாயனகூட சேவைப் பிரிவின் பிரதிப்

2

மணமகன் தேவை

1988, யாழிந்து வேளாளர், கேட்டை

DOCTOR, சுண்டுக்குழி

31/12/2020 வரை பதிவு கட்டணத்தில் 40% கழிவு

31/12/2020 வரையான பதிவுக்கு தரகர்கூலி இல்லை

Call 076 664 9401 (Whatsapp/Viber)

ஒன்லைன் திருமண சேவை

www.EQMarriageService.com

Ensured Quality Lanka (Pvt) Ltd., Bambalapity, Colombo 04.

## வலி கிழக்கு தவிசாளரைக் கைது .................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கடந்த சில நாள்களுக்கு முன்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலானவர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபைக்குச் சொந்தமான ஊரெழு அம்மன் கோவில் வீதியை புனரமைக்கவுள்ளதாக அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இவ்வீதியை புனரமைக்க முகவராக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் உள்ளிட்டவர்களின் புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டு திட்டப் பெயர்ப்பலகை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்தநிலையில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் தவிசாளருக்குத் தகவல் வழங்கியமையை அடுத்து, விரைவாக குறித்த பெயர்ப்பலகையை அகற்றுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அவர் கடிதம் (தொலைநகல் வாயிலாகவும்) அனுப்பியிருந்தார்.

ஒரு கடமை நாள் சென்ற பின்னரும் அவர்கள் அகற்றாத நிலையில் பிரதேச சபை ஒன்றுக்குச் சொந்தமான வீதியை மத்திய அரச நிறுவனமாக இருந்தால் என்ன எந்த நிறுவனமாக இருந்தால் என்ன எக்காரணம் கொண்டும் பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல் புனரமைக்க முடியாது எனத் தெரிவித்து தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குறித்த பெயர்ப்பலகையை அகற்றுமாறு பணித்திருந்தார்.

இதன்படி பிரதேச சபையால் குறித்த அறிவிப்புப் பலகை எடுத்துவரப்பட்டு சபையில் வைக்கப்பட்டது. இந்தநிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டை அடுத்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளரிடம் பிரதேச சபைக்கு வருகை தந்து அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர்.

இதில் பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியைப் புனரமைக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை சபையின் அனுமதியின்றி வீதி அதிகார சபை புனரமைப்பதற்கு முயற்சித்தமை சட்டவிரோதம் எனவும், அதனாலேயே சபை ஒன்றுக்கு பகிரப்பட்ட அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகவே தாம் குறித்த திட்டப் பெயர்ப்பலகையை அகற்றியதாகவும், உரிய முறைப்படியான அனுமதி பெறப்பட்டால் அல்லது உரிய வாறு அணுகினால் குறித்த பெயர்ப்பலகையை கையளிக்கத் தயார் எனவும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

மேலும், பிரதேச சபை என்பது அதிகாரப் பகிர்வுக்கான ஓர் அலகு என்ற அடிப்படையில் மத்திய அரசின் சட்டத்துக்கு விரோதமானதும் தேவையற்ற தலையீட்டையும் தாமும் தமது சபையும் ஏற்க முடியாது எனவும், அபிவிருத்திக்கு நாம் தடை அல்லர், ஆனால், அதனைச் சட்டத்திட்டங்களுக்கு ஏற்ப பொறுப்புச் சொல்லும் பாங்குடன் மத்திய அரசின் நிறுவனங்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

தவிசாளரிடம் இரண்டு தடவைகள் அச்சுவேலி பொலிஸார் வாக்குமூலம் பெற்றிருந்த நிலையில் இன்று அவரைக் கைது செய்வதற்காகப் பிரதேச சபை அலுவலகத்தில் பல மணி நேரமாகக் காத்திருந்தனர்.

குறித்த செய்தியை அறிந்த வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், பா.கஜதீபன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் பிரதேச சபைக்கு வருகை தந்திருந்தனர்.

எனினும், தவிசாளர் சபைக்கு வருகை தராததால் நீண்ட நேரம் காத்திருந்த பொலிஸார் திரும்பிச் சென்றனர்.

## கிழக்கில் மேலும் 45 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அக்கரைப்பற்றில் 42 பேருக்கும், ஆலையடிவேம்பு, சாய்ந்தமருது மற்றும் பட்டிப்பளையில் தலா ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து கிழக்கு மாகாணத்தில் மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 393 ஆக அதிகரித்துள்ளது.

அதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் 282 பேரும், மட்டக்களப்பில் 95 பேரும், திருகோணமலையில் 16 பேரும் இது வரை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிழக்கில் அக்கரைப்பற்றுக் கொத்தணி மூலம் 235 பேரும், மினுவாங்கொடை மற்றும் பேலியகொட கொத்தணிகள் மூலம் 158 பேரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்றுக் கொத்தணி பாதிப்பு மேலும் அதிகரிக்கலாம் எனவும் கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

## வடக்கில் தொடருகின்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2008ஆம் ஆண்டு நிஷா புயலால் ஏற்பட்ட தாக்கத்தின் பின்னர் தற்போது வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் சூரியராஜ் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 358 குடும்பங்களைச் சேர்ந்த 1,340 பேர் 21 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சீரற்ற காலநிலையால் கிளிநொச்சி மாவட்டத்தில் 1,926 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 668 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 703 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 151 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 227 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 784 பேரும், வவுனியா மாவட்டத்தில் 137 குடும்பங்களைச் சேர்ந்த 424 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## மக்கள் அச்சமடையத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொண்டுள்ள இராணுவத் தளபதி, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுப்பதே எப்போதும் சிறந்தது என்றும் சுட்டிக்காட்டினார்.

நத்தார் பண்டிகைக்குச் சில வாரங்களே உள்ள நிலையில் இது தொடர்பாக அடுத்த வாரமளவில் ஆராயப்படவுள்ளது என்றும், மக்கள் அதிகமாக ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் வகையில் மேலதிக சுகாதார வழிகாட்டுதல்களை அமுல்படுத்த வேண்டுமா என்பது குறித்து அதன்போது தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் நெருக்கமாக வசிக்கும் பகுதிகளில் கொரோனாத் தொற்றுப் பரவுவதைத் தடுப்பதற்கு அந்தப் பகுதிகள் தனிமைப்படுத்தப்படும் என்றும், முழு பொலிஸ் பகுதிகளையும் முழுமையாக முடக்குவதை விட, அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட பகுதிகளை தனிமைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து இந்த மாத இறுதிக்குள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரும் எனச் சுகாதார அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளனர் என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

## தவிசாளர் நிரோஷின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ப்பலகை நடப்பட்டது. அது வலி. கிழக்கு பிரதேச சபையின் அனுமதி பெறப்படாது நடப்பட்டது என்று தவிசாளர் தியாராஜா நிரோஷ், அதனை அகற்றுவதற்குப் பணித்திருந்தார். அந்தப் பெயர்ப் பலகை கடந்த வாரம் அகற்றப்பட்டது.

பெருந்தெருக்கள் அமைச்சினால் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 100 லட்சம் கிலோ மீற்றர் வீதிகளை சீரமைக்கும் திட்டத்தில் அதனை நடைமுறைப்படுத்தும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, எந்தவொரு வீதியிலும் திட்டத்தின் பெயர்ப்பலகையை நடுவதற்கு அதிகாரம் உண்டு என்று சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்தச் சுற்றறிக்கையை கவனத்தில் கொள்ளாது வலி.கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர், அச்செழு அம்மன் ஆலய வீதியில் நடப்பட்ட பெயர்ப்பலகையை அகற்றி அரச சொத்தைச் சேதப்படுத்தியுள்ளார் - என்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அத்துடன், அச்செழு அம்மன் கோவில் வீதியை சீரமைக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணம் நிறைவேற்று பொறியியலாளரால் நவம்பர் 27ஆம் திகதியிடப்பட்ட கடிதம், வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனினும் வலி.கிழக்கு பிரதேச சபையின் அனுமதியின் அச்செழு அம்மன் கோவில் வீதி சீரமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டதுடன், அறிவிப்பு பெயர்ப்பலகையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக வலி.கிழக்கு தவிசாளர் தியாகராஜா நிரோஷ், டிசெம்பர் 2ஆம் திகதி குறிப்பிடப்பட்ட கடிதத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பியுள்ளார்.

தம்மால் 27ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்தின் ஊடாக அச்செழு வீதி சீரமைப்புத் தொடர்பில் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணம் நிறைவேற்று பொறியியலாளரால் தவிசாளருக்கு டிசெம்பர் 3ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முறைப்பாட்டின் அடிப்படையில் பிரதேச சபைத் தவிசாளர், தியாகராஜா நிரோஷிடம் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமை வாக்குமூலம் அச்சுவேலி பொலிஸார் பெற்றிருந்தனர்.

அதில் அவர் பெயர்ப்பலகையை அகற்றியதற்கான தனது விளக்கத்தை வழங்கியிருந்தார். அத்துடன், அகற்றிய பெயர்ப்பலகையையும் அவர் பொலிஸாருக்குக் காண்பித்திருந்தார்.

இந்த நிலையிலேயே அரச சொத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் இன்று திங்கட்கிழமை அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்ய சபையின் தலைமையகத்துக்குச் சென்றிருந்தனர். இன்று காலை முதல் மாலை வரை அவர் சபைக்கு சமுகமளிக்காததால் பொலிஸார் திரும்பிச் சென்றனர்.

இந்த நிலையில் வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர், தியாகராஜா நிரோஷை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்வதைத் தடுக்கும் விண்ணப்பம் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் அவரது சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டது.

தவிசாளர் கைது செய்யப்படுவது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று குறிப்பிட்டு சட்டத்தரணிகள் விஸ்வலிங்கம் திருக்குமரன், விஸ்வலிங்கம் மணிவண்ணன், சுபாஸ்கரன் உள்ளிட்டோர் மன்றில் சமர்ப்பணம் செய்தனர்.

அதனை ஆராய்ந்த மன்று விண்ணப்பத்தை நாளை மறுதினம் பரிசீலனைக்கு எடுக்க திகதியிட்டதுடன், அன்றைய தினம் அச்சுவேலி பொலிஸாரை மன்றில் முன்னிலையாக அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டது.

## ஜி.சீ.ஈ. சாதாரண .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைக்கான புதிய திகதி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண தரப் பரீட்சையை ஜனவரி மாதம் 18 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில், நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்ததையடுத்து பரீட்சை பிற்போடப்பட்டிருந்தது.

மார்ச் மாதம் பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும், இதற்கு மேல் பரீட்சையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் கல்வி அமைச்சர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த பரீட்சையின் பெறுபேறுகளை 2021 ஜூன் மாதத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஹர சிறை சம்பவம்: .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலி சப்ரியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் இந்த விசாரணை நடவடிக்கைகளுக்காக 25 பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருந்தது.

மஹர சிறைச்சாலையில் கடந்த தினம் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் ஆராய்வதற்காக நீதி அமைச்சரால் இந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

அவர்கள் கடந்த 03 ஆம் திகதி முதன் முறையாக மஹர சிறைச்சாலைக்குச் சென்று வாக்குமூலம் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மஹர சிறை சம்பவம்: .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் டாக்டர் சமன் ரத்னாயக்க தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதற்காக மேலும் 5 அரச வைத்தியசாலைகள் மற்றும் 5 தனியார் வைத்தியசாலைகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## பேரினவாத வெறிப் போக்கால் நீதி, நியாயம் புலப்படவில்லை

பெரும்பான்மை என்ற அட்சரகணித எண்ணிக்கையை வசதியாக வைத்துக் கொண்டு பேரினவாதிகள் என்ன ஆட்டமும் போடுவார்களாம். பாதிக்கப்படும் – அடக்கி ஒடுக்கப்படும் – சிறுபான்மை இனத்தவர்கள் வாய்மூடி மௌனிகளாக அவற்றைத் தாங்கிக் கொண்டிருக்க வேண்டுமாம். குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் கூட அவற்றை முறையிட கூடாதாம். அப்படி முறையிட்டால் அவற்றை சிங்களவர்களுக்கு எதிரான வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் உரைகளாகக் கருதி, அப்படி முறையிடுபவர்களை நாடாளுமன்றத்துக்குள்ளேயே வரவிடாமல் துரத்துவார்களாம்.

இதுதான் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் புதிய – திமிர்த்தனமான – ஆணவப் போக்குடைய – அறிவிப்பு.

நாட்டின் சட்டம், ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற பதவியில் இருக்கின்ற பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான ரியர் அட்மிரல் சரத் வீரசேகராவே இப்படி அகங்கார உரை நிகழ்த்தியிருக்கின்றார்.

தன்னுடைய நாட்டினது சரித்திரமும் கடந்த காலமும் தெரியாமல் நாடாளுமன்றத்தில் பேரினவாத வெறியில் அவர் பிதற்றுகின்றார் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.

இலங்கையில் சமஷ்டியை அறிமுகப்படுத்துவது குறித்து வேறு நாட்டுடன் பேச்சுக்களை மேற்கொள்ளுவார்கள் என்றால் அது அவர்கள் செய்து கொண்ட சத்தியப் பிரமாணத்துக்கு முற்றிலும் விரோதமானது என்று புதிய கண்டுபிடிப்பையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

அப்படியானால், இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமரில் இருந்து அவரது மொட்டுக் கட்சியின் ஸ்தாபு செயலாளர் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் வரை அனைவருக்கும் எதிராக நடவடிக்கை எடுத்த பின்னர்தான் தமிழ்ப் பிரதிநிதிகள் மீது அவரது கவனம் திரும்ப வேண்டும் என்பதை அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சமஷ்டியைப் பற்றி பேசுவது – அதுவும் வெளிநாட்டில் போயிருந்து பேசுவது – நாட்டின் அரசமைப்புக்கு விசுவாசமாகச் செய்து கொண்ட சத்தியப் பிரமாணத்துக்கு மாறானது என்றால் – 2002 இல், நோர்வேயில் போய் இருந்து, இந்த நாட்டில் தனித் தேசம் ஒன்றை உருவாக்குவதற்காக ஆயுத வழியில் போராடிக் கொண்டிருந்த தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன், சமஷ்டி முறையில் ஒரு தீர்வைக் காண்பதற்கு இலங்கை அரசின் சார்பில் இணங்குகின்றோம் என 'ஒஸ்லோ அறிக்கை' மூலம் பிரகடனப்படுத்திய அப்போதைய அரசக் குழுவின் தலைவர் பேராசிரியர்ஜி.எல்.பீரிஸ் மீதுதான் முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்க அமைச்சராக இருந்து கொண்டு வெளிநாடு ஒன்றில் போய் அங்கிருந்தபடி சமஷ்டித் தீர்வுக்கு இணங்குவதாக அறிவித்தவர் அவர்தான்.

அவர் மீது சட்டம் பாய வேண்டும் என்றோ, அல்லது அவரை நாடாளுமன்றத்தில் இருந்து துரத்த வேண்டும் என்றோ யாரும் குரல் எழுப்பவில்லை – இதே ரியல் அட்மிரல் சரத் வீரசேகரா உட்பட.

அதற்குக் காரணம் உண்டு. அப்போதிருந்த புலிகளின் பலம். அல்லது அவர்களின் அடி.

இப்போது அது இல்லாததால் அண்ணன், தம்பி உதவுபவர்களாக இல்லை. மாறாக திமிர்த்தனத்தில் அட்டகாசப் பேச்சு – பேரினவாத வெறிப் பிதற்றல் – மேற்கொள்கின்றார்கள். அவ்வளவுதான்.

நாட்டுக்கு சட்டம், அரசமைப்பு எல்லாம் இருக்கின்றன என்பது தமிழ்த் தலைவர்களுக்கும் நன்கு தெரியும். ஆனால் அதைவிட உயர்வான சர்வதேச முறைமைகளும், எழுதப்படாத சட்டங்களும், மனிதாபிமான வழக்காறுகளும், நீதிகளும் உள்ளன என்பதை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் சரத் வீரசேகர புரிந்து கொள்ள வேண்டும்.

தனி மக்கள் கூட்டங்களுக்கு – தனித்துவமான இனங்களுக்கு – உரிய அடிப்படை உரிமைகளையும், அவற்றைப் பெரும்பான்மை எண்ணிக்கை என்ற ஜனநாயகக் கேலிக் கூத்தின் மூலம் கூட முறியடித்த விட முடியாது என்பதையும், அத்தகைய சூழ்நிலைகளில் உள்நாட்டுச் சட்டங்களை மீறி, சர்வதேச வழக்காறுகளும், முறைமைகளும், நீதிகளும் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தும் என்பதையும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

'பொதுமக்கள் பாதுகாப்பு' என்றால் அது வெறுமனே நாட்டின் பெரும்பான்மையினரான பௌத்த, சிங்களவர்களை மட்டுமே குறிக்கும் என்ற பேரினவாத மேலாண்மை சிந்தனையிலிருந்து முதலில் அவர் வெளியே வரவேண்டும்.

நாட்டில் – சமூகத்தில் – அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட, நலிவுற்ற மக்கள் கூட்டத்தினரைப் பாதுகாப்பதே 'பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின்' பிரதான கடமையாக இருக்க வேண்டும்.

பேரினவாத வெறிச் சிந்தனையோடு எல்லா விடயங்களையும் நோக்குகின்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகரா போன்றோருக்கு ஒடுக்கப்பட்ட – அடக்கப்பட்ட – சிறுபான்மை மக்களின் அவலக் குரல் காதில் விழுவதில்லை; கண்களுக்குத் தெரிவதில்லை.

ஏனென்றால் பேரினவாத அகங்காரம் – திமிர் – தடிப்பு – மமதை – கண்களை மறைத்து நிற்கின்றது. அவ்வளவுதான்.

# தமிழ் மக்களுக்கு இந்நாட்டில் அச்சுறுத்தல்கள் அதிகரிப்பு!

## இராதாகிருஷ்ணன் கவலை




தமிழ் மக்களுக்கு இந்நாட்டில் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அத்துடன், மஹர சிறைச்சாலை சம்பவத்தின் தாக்கம் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் எதிரொலிக்கும் என்பதால் அரசாங்கம் அதற்கு பொறுப்புக்கூறியாகவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தலவாக்கலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படியே நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

மக்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் கருத்துகளை கூறுவதற்கும் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குமான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது.

தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பு தொடர்பில் அல்லாமல் ஏனைய விடயங்களை பேசுவதற்கான அனுமதி அவர்களுக்கு இருக்கின்றது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் துவேசம் கக்கும் உறுப்பினர்களே அதிகம் இருக்கின்றனர். அவ்வாறு துவேசம் பேசும் ஓர் அமைச்சர்தான் கூட்டமைப்பினரை தடைசெய்ய வேண்டும் எனச் சொல்கின்றார்.

அவருக்கு அதற்கான அதிகாரம் கிடையாது. மக்கள் நினைத்தால் மட்டுமே அதனை செய்ய முடியும். அவரின் கருத்தை நாம் கண்டிக்கின்றோம்.

சரத் பொன்சேகாவும் தமிழ் மக்களின் மனம் புண்படும் விதத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். அதனையும் கண்டிக்கின்றோம்.

பிள்ளையானை விடுதலை செய்தது எமக்கு பிரச்சினை இல்லை. அவ்வாறு தமிழ் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. அப்போதுதான் ஒரே நாடு, ஒரே சட்டம் என்பது நடைமுறை சாத்தியமாகும்.

மஹர சிறைச்சாலையில் கைதிகள் தாக்கப்பட்டுள்ளனர், கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும். இந்தச் சம்பவத்தின் தாக்கம் ஜெனிவா மனித உரிமை மாநாட்டிலும் எதிரொலிக்கும்.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலான சூழ்நிலையே தொடர்ந்தது. தற்போது அது அதிகரித்துள்ளது. – எனஅவர் மேலும் தெரிவித்தார்.

# கே.பியைப் போல் மகேந்திரனும் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார்!

## சரத் வீரசேகர கூறுகிறார்



கே.பி. என்ற குமரன் பத்மநாதனை அழைத்துவந்தமை போல், நாட்டுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தி கோடிக் கணக்கிலான நிதி மோசடியைச் செய்த மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனும் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

வெளிநாடொன்றில் வசிக்கும் ஒருவரை நாட்டுக்கு அழைத்து வரவேண்டுமாயின் அதற்காக இரு நாடுகளுக்கு இடையில் சர்வதேச உடன்படிக்கை ஒன்று இருத்தல் அவசியமாகும்.

இந்நிலையில், இதுதொடர்பாக இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸ் பிரதானியுடன் கலந்துரையாடியதாகத் தெரிவித்துள்ள அவர், மகேந்திரனை சர்வதேச நியதிகளுக்கு அமைய நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக சிங்கப்பூர் அரசாங்கத்திடம் ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அவரை நாட்டுக்கு அழைத்து வந்து அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

# வெள்ளத்தில் சிக்கிய 550 மாடுகள் இராணுவத்தினர் உதவியுடன் மீட்பு

## மன்னார் பெரியமடுப் பகுதியில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.08

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட அதிக மழையின் காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் பெரியமடுப் பகுதியில் உயிரிழந்த 13 மாடுகளின் உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

550 மாடுகள் இராணுவத்தினரின் உதவியுடன் வெள்ளத்தில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் கடந்த 2ஆம் திகதி ஏற்பட்ட புரெவிப் புயலின் காரணமாக சுமார் 40 இற்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்தன எனஅறிக்கையிடப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் 13 மாடுகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இதேநேரம் பெரியமடு பகுதியில் 600ற்கும் மேற்பட்ட மாடுகள் அதிக வெள்ளத்திற்குள் அகப்பட்டு தரைத் தொடர்புகள் மூன்று பக்கங்களால் துண்டாடப்பட்ட நிலையில், அவற்றில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாடுகள் படையினரின் உதவியால் மீட்கப்பட்டன.

இதேநேரம் கால் நடைகளின் உரிமையாளர்கள் படகில் சென்றும் சில மாடுகளை மீட்டு வந்தனர்.

தற்போது வெள்ள நிலமை சற்று குறைவடைந்த சமயம் அப் பகுதிகளில் இருந்து 13 மாடுகள் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன – என்றார்.

## மோ.சைக்கிள் ஓட்டப் பந்தயம்; இளைஞர்கள் குழு ஒன்று கைது

உந்துருளி ஓட்டப்பந்தயம் ஒன்றை நடத்துதற்கு தயாரான இளைஞர்கள் குழு ஒன்று கைது செய்யப்பட்டுள்ளது.

கிம்புளாவெலயில் இருந்து சிறி ஜெயவர்தனபுர வைத்தியசாலை வரையில் அவர்கள் இந்தப் போட்டியை நடத்த திட்டமிட்டிருந்தனர்.

அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவற்துறை ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# அரசியல் கட்சி ஆரம்பிப்பதற்கு முன்னர் சகோதரரிடம் ஆசீர்வாதம் பெற்றார் ரஜினி!



நடிகர் ரஜினிகாந்த் பெங்களூர் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி சென்னை போயஸ்கார்டனில் செய்தியாளர்களிடம் பேசிய ரஜினிகாந்த், 2021 தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் வகையில் ஜனவரி மாதம் புதிய அரசியல் கட்சியை ஆரம்பிக்க இருக்கிறார் என அறிவித்திருந்தார்.

பின்னர் புதிய நிர்வாகிகளையும் ரஜினி நியமித்தார். இந்நிலையில், கர்நாடக மாநிலம் பெங்களூருக்கு ரஜினிகாந்த் சென்றுள்ளார். அங்கு தனது சகோதரர் சத்யநாராயணாவை சந்தித்து, கட்சி ஆரம்பிப்பதை முன்னிட்டு அவரிடம் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார்.

# சத்தீஸ்கரில் கரடி தாக்கி 4 பேர் பரிதாபகர சாவு!



சத்தீஸ்கர் மாநிலத்தில் கரடி தாக்கி 4 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். கோரியா மாவட்டம் ஆங்க்வாஹி கிராமத்துக்குள் அருகிலிருந்த வனபகுதியில் இருந்து நேற்றுப் புகுந்த கரடி ஒன்று, எதிர்பட்ட மக்களை தாக்கியுள்ளது. கரடியின் தாக்குதலில் மொத்தம் 7 பேர் பலத்த காயமடைந்தனர்.

அவர்களில் 4 பேர் உயிரிழந்த நிலையில், மேலும் 3 பேர் சிகிச்சை பெறுகின்றனர். தாக்குதலில் ஈடுபட்ட கரடி தப்பியோடிவிட்ட நிலையில், அதை மயக்க மருந்து செலுத்தி பிடிக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# டெல்லியில் துப்பாக்கிச் சண்டை நடத்தி 5 தீவிரவாதிகள் பொலிஸாரால் கைது!



டெல்லியில் துப்பாக்கிச் சண்டை நடத்தி 5 தீவிரவாதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர். டெல்லி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிறப்பு பிரிவினர், ஷாகர்பூர் பகுதியில் 5 பேரை கைது செய்துள்ளனர்.

முன்னதாக இரு தரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வீதியில் பயன்படுத்தப்பட்ட தோட்டாக்கள் சிதறிக் கிடப்பது, கார் சேதமடைந்திருப்பது உள்ளிட்ட காட்சிகள் வெளியாகியுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தீவிரவாதத்துக்கு ஆதரவாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்றும், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.எஸ். உளவு அமைப்பால் இயக்கப்படுபவர்கள் என்றும் டெல்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 5 பேரில் 3 பேர் ஜம்மு – காஷ்மீரையும், 2 பேர் பஞ்சாப்பையும் சேர்ந்தவர்கள் என டெல்லி பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்கள், ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மூன்றாம் கட்ட சோதனையில் கோவேக்சின் தடுப்பூசி மருந்து!



கோவேக்சின் தடுப்பூசிக்கான மூன்றாம் கட்டப் பரிசோதனைகள் இன்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பமாகியுள்ளன.

இந்த மருந்து ஏற்கனவே இரண்டு கட்டங்களாக மனிதர்களுக்கு செலுத்தி பரிசோதிக்கப்பட்டுள்ள நிலையில், அதனால் எந்தப் பக்க விளைவுகளும் ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சிலுடன் இணைந்து ஹைதராபாதில் செயற்பட்டுவரும் பாரத் பயோடெக் நிறுவனமானது கொரோனாவைத் தடுக்கும் மருந்தைக் கண்டறிவதில் இறுதி நிலையை எட்டியதைத் தொடர்ந்து மனிதர்களுக்கு அந்த மருந்தை அளித்து பரிசோதிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவேக்சின் எனப்படும் இந்த மருந்தை விரைவில் பொது மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரவும் நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக 30 தன்னார்வலர்களுக்கு தடுப்புமருந்து செலுத்தப்பட்டு பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அவை வெற்றி பெற்றதாக எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவனம் தெரிவித்தது. அதைத் தொடர்ந்து 150 இற்கும் மேற்பட்டோருக்கு இரண்டாம் கட்டப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

அவர்களது உடல் நிலை கண்காணிக்கப்பட்டு வருகிறது. தற்போது மூன்றாம் கட்டமாக ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பரிசோதனை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவென்றாலும் இவர்தான் என் மனைவி பாதுகாப்பு உடையணிந்து தாலிகட்டிய மணமகன்!



ராஜஸ்தான் மாநிலத்தில் கல்யாணப்பெண்ணுக்கு கொரோனா என்று தெரிந்ததும், கொரோனோ தனிமை மையத்திலேயே கொரோனோ தடுப்பு உடை அணிந்து தாலி கட்டினார் மணமகன்.

ராஜஸ்தான் பாரான் மாவட்டத்தில் நடக்க இருந்த ஒரு திருமணத்தில், திருமண நாள் காலையில் மணப்பெண்ணுக்கு கொரோனோ பொசிட்டிவ் என்று தெரிய வந்தது. அவரை உடனே தனிமைப்படுத்தியாக வேண்டும், திருமணமே நடக்காது என்ற சூழல் ஏற்பட்டது. அதனால் கல்யாணப்பெண் மணமுடைந்து போனார்.

ஆனால் மாப்பிள்ளை விடவில்லை. என் மனைவி இவள்தான். அதுவும் இன்றே திருமணம் செய்வேன் என்று முடிவு எடுத்தார். இரண்டு குடும்பத்தார்களும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர். அவர்கள் மாவட்ட சுகாதார அதிகாரியை சந்தித்து பேசினார்கள். பின்பு அவரது சம்மதத்துடன், கொரோனோ தனிமை மையத்திலேயே மாப்பிள்ளையும் மணப்பெண்ணும் முழு கொரோனோ தடுப்பு உடையை அணிந்துக் கொண்டு திருமணம் செய்து கொண்டனர்.

மாப்பிள்ளையும் மணப்பெண்ணும் மட்டுமல்லாமல் அவர்களின் பெற்றோர்களும் சடங்குகள் நடத்தும் புரோகிதரும் முழு கொரோனோ தடுப்பு உடைகளை அணிந்துக்கொண்டனர். அந்த உடையுடனே புரோகிதர் மந்திரங்கள் சொல்லி சடங்குகள் செய்ய, அந்த தடுப்பு உடையுடனே மாப்பிள்ளையும் மணப்பெண்ணும் மாலை மாற்றிக்கொண்டார்கள். மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தாலியும் கட்டினார்.

கல்யாணமாலை
வட சர்வதேச
திருமண சேவை

**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1980.02.25
மதம் - இந்து V
நட்சத்திரம் - திருவாதிரை
செவ் - 02
பாவம் - -------
கல்வி - MBBS
தொழில் - MBBS Doctor
எதிர்பார்ப்பு - வெளிநாட்டு டாக்டர் மணமகள் தேவை.

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1990.01.29
மதம் - இந்து V
நட்சத்திரம் - சதயம்
பாவம் - 49 3/4
சூ/செவ் - --------
கல்வி - MBBS
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor OR Enginner

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# ஆந்திராவில் மர்மநோய் தாக்கம் 292 பேரின் உடல்நலம் பாதிப்பு!



## ஒருவர் சாவு

ஆந்திராவின் எலுரு என்ற நகரின் பல இடங்களில் வசித்த 292 பேர் வரை மர்ம நோய் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் அவர்களில் ஒருவர் மரணித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைவருக்கும் மயக்கம், தலைசுற்றல், வாந்தி, நடுக்கம், குமட்டல், கீழே விழுதல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டன என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் ஒரே பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்லர் எனவும், பொதுவான எந்தவொரு நிகழ்ச்சியிலும் பங்கேற்கவில்லை என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, முதியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கிச்சைக்கு சேர்க்கப்பட்டவர்களில் இதுவரை 140 பேர் வீடு திரும்பியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மருத்து நிபுணர் குழுவினர் எலுரு பகுதியில் முகாமிட்டுள்ளதுடன் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களின் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில் எந்தப் பிரச்சினையும் கண்டறியப்படவில்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்த ஆந்திர சுகாதாரத்துறை அமைச்சர் அல நானி, உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள யாருக்கும் கொரோனோ தொற்று இல்லை எனவும் மக்கள் அச்சப்படத் தேவையில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எலுரு பகுதியில் குடிதண்ணீரில் இரசாயன வேதிப்பொருள் நிறைந்த மாசுபட்ட நீர் கலந்திருக்கலாம் எனவும் அதனைக் குடித்தமையால்தான் மக்களுக்கு இவ்வாறான பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றும் முதற்கட்டத் தகவல் வெளியாகியுள்ளன. இதனால், இந்த விவகாரம் தொடர்பாக மருத்துவர் குழு தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றது.

# கொரோனாவால் மோசமான வறுமை 100 கோடியைத் தொடும் - ஐ.நா.!

## 2030 வரை மீட்சியில்லையாம்

கொரோனா வைரஸின் நீண்டகாலப் பாதிப்பால் 2030 ஆம் ஆண்டுக்குள் உலகில் வாழும் மக்களில் மேலும் 20.70 கோடி பேர் வறுமைக்குள் செல்வார்கள் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதன்மூலம், மோசமான வறுமை நிலைக்குத் தள்ளப்படுவோர் எண்ணிக்கை 100 கோடிக்கும் மேல் அதிகரிக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் ஐ.நா. மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 10 ஆண்டுளில் கொரோனா வைரஸின் பன்முகப் பாதிப்பு, நிலையான வளர்ச்சி இலக்குகளை நோக்கி கொரோனா பாதிப்பிலிருந்து மீள்வது ஆகியவை தொடர்பாக ஐ.நா. மேம்பாட்டுத் திட்டம் சார்பில் ஆய்வு நடத்தப்பட்டது.

அமெரிக்காவின் டென்வர் பல்கலைக்கழகம் மற்றும் ஐ.நா. மேம்பாட்டுத் திட்டம் சார்பில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்நிலையில் இந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சர்வதேச நிதியத்தின் கணக்கின்படி கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்பு உலகளவில் 4.40 கோடிக்கும் அதிகமான மக்கள் மோசமான வறுமையில் வாழ்ந்து வருகிறார்கள் என மதிப்பிட்டிருந்தது.

ஆனால், கொரோனா வைரஸ் பாதிப்புக்குப் பின்னர் கூடுதலாக உலகளவில் 20.70 கோடி மக்கள் மோசமான வறுமைக்குள் தள்ளப்படுவார்கள். அதிலும் பெண்கள் வறுமையில் வாழும் எண்ணிக்கை 10.20 கோடியாக அதிகரிக்கும்.

கொரோனாவால் உண்டான பொருளாதார பிரச்சினைகளில் 80 வீத உற்பத்திப் பாதிப்பு 10 ஆண்டுகளுக்கு நீடிக்கும். இது கொரோனா வைரஸ் பாதிப்புக்கு முன்பிருந்த நிலையை எட்டுவதைத் தடுக்கும்.

அடுத்த 10 ஆண்டுகளுக்கு நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை முன்வைத்த முதலீடுகள், சமூக பாதுகாப்புத் திட்டம், நலத் திட்டங்கள், நிர்வாகம், டிஜிற்றல் மயமாக்கல், பசுமைப் பொருளாதாரம் போன்றவற்றாலும் மக்கள் மோசமான வறுமைக்குள் செல்வதைத் தடுக்க முடியாது.

ஆனால், இப்போதுள்ள கொரோனா பாதிப்பை கணக்கில் எடுத்து, நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளில் தொடர்ந்து கவனம் செலுத்தும்போது, 14.6 கோடி மக்களை மோசமான வறுமையிலிருந்து மீட்டு, பாலின வறுமைக்கான இடைவெளியையும் குறைக்க முடியும். பெண்கள் வறுமையில் வீழ்வதை 7.40 கோடியாகக் குறைக்க முடியும்.-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இது தொடர்பாக ஐ.நா. மேம்பாட்டுத் திட்ட நிர்வாகி அசிம் ஸ்டெய்னர் கூறுகையில்:-

வறுமை தொடர்பாக இந்த புதிய ஆராய்ச்சியின் மூலம் உலகத் தலைவர்கள் எடுக்கும் முடிவுகள் உலகை மாறுபட்ட திசைகளில் கொண்டுசெல்ல முடியும்.

அடுத்த 10 ஆண்டுகளில் முதலீடுசெய்ய நமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு கொரோனாவிலிருந்து மக்கள் மீள்வதற்கு உதவுவது மட்டுமல்லாது வளர்ச்சிக்கான பாதையை மறுசீரமைக்கும். இந்த பூமி பசுமையான எதிர்காலத்தை நோக்கி நியாயமாகச் செல்ல வழிகாட்டும்.- என்று குறிப்பிட்டுள்ளார்.

# சீன நிலக்கரிச் சுரங்கத்தில் சிக்கி சாவடைந்தோர் 23 ஆக உயர்வு!

சீனாவின் தென்மேற்கு நகரமான சோங்கிங்கில் ஒரு சுரங்கத்தில் சிக்கி இருபத்து மூன்று பேர் இறந்தனர் என அதிகாரபூர்வ சின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

யாங்சுவான் மாவட்டத்தில், முன்னர் இயக்கம் நிறுத்தப்பட்ட நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து இயந்திரங்களை அகற்றும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தபோதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

அப்போது அங்கு அளவுக்கதிகமாக கரியமில வாயு கசிந்ததால் நிலத்தடியில் பணியாற்றிக் கொண்டிருந்த 13 பேர் உயிரிழந்தனர் எனக் கடந்த சனிக்கிழமை தெரிவிக்கப்பட்டது

இந்தநிலையில், விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23ஆக அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த விபத்து தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

டையொய்டோங் நிலக்கரி சுரங்கத்தில் அதிகப்படியான கார்பன் மோனாக்சைட் வாயுவால் நிலத்தடியில் சிக்கிய 24 பேரில் இறந்தவர்களும் அடங்குவர் என அந்த நிறுவனம்



தெரிவித்துள்ளது.

30 மணி நேரத்துக்கும் மேலான தேடல் மற்றும் மீட்பு முயற்சிகளுக்குப் பின்னர் தப்பிய ஒருவர் மீட்கப்பட்டுள்ளார்.

அவசரநிலை மேலாண்மை அமைச்சகத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, 'நிலக்கரிச் சுரங்கங்களில் பெரிய விபத்துக்கள் நிகழாமல் தடுக்க தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்குமாறு சீனா உள்ளூர் அதிகாரிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டது.

அனைத்து நிலக்கரி சுரங்கங்களிலும் விரிவான பாதுகாப்பான உற்பத்தி சோதனையை ஆரம்பிக்கவும், காலாவதியான உற்பத்தி திறனை ஒழுங்காகவும் பாதுகாப்பாகவும் அகற்றவும் மாநில சபையின் அதிகாரிகள் சோங்கிங் அரசை வலியுறுத்தினர்.

## பைடனின் பதவியேற்பு எளிமையாக நடக்கும்!



கொரோனா பரவலைக் கருத்தில் கொண்டு, பதவியேற்பு விழாவில் பெரிய அளவில் கூட்டம் சேர்க்காமல் எளிமையான முறையில் நடத்த திட்டமிட்டுள்ளதாக ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள ஜோ பைடன் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி பதவி ஏற்கவுள்ள நிலையில் இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர், அதிகளவிலானவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றமை சாத்தியமில்லை எனக் கூறினார்.

தமக்கு மக்களின் பாதுகாப்பே முக்கியம் என்றும் அதனால், பதவியேற்பு விழா பிரமாண்டமாக இருக்காது என்றும் குறிப்பிட்ட ஜோ பைடன் பதவியேற்பு விழா கோலாகலமாக நடக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பென்சில்வேனியா அவென்யூவில் அணிவகுப்பு போன்ற சில நிகழ்வுகள் சிறிய அளவில் ஏற்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 08.12.2020 | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 கணிதம் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 08 விஞ்ஞானம் (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 கணிதம் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 09 விஞ்ஞானம் (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 கணிதம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 புவியியல் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 புவியியல் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 புவியியல் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 கணிதம் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 07 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 பௌதிகவியல் (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 பௌதிகவியல் (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 கணிதம் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 06 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 அரசியல் விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 அரசியல் விஞ்ஞானம் (த) |

## ட்ரம்ப்பின் தேர்தல் சட்ட சவால்களுக்கான தலைமை வழக்கறிஞருக்குக் கொரோனா!

அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப்பின், தனிப்பட்ட வழக்கறிஞர் ருடி ஜூலியானிக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

76 வயதான ருடி ஜூலியானி, ஞாயிற்றுக்கிழமை வொஷிங்டன் டி.சி.யில் உள்ள மெட்ஸ்டார் ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று அமெரிக்க ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகளுக்கு ட்ரம்ப் பிரசாரத்தின் சட்ட சவால்களுக்கு தலைமை தாங்கிய ஜூலியானி, ட்ரம்ப்புக்கு நெருக்கமானவர்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளானோரில் அண்மைய நபர் ஆவார்.

மெலானியா ட்ரம்ப், ட்ரம்ப்பின் மகன்கள் டொனல்ட் ஜூனியர், பேரன், ட்ரம்ப்பின் செயலாளர், அவரது பிரசார நிர்வாகி, அவரது ஆலோசகர்களில் சிலர் என பல்வேறு நபர்கள் இதற்குமுன் கொரோனா பாதிப்புக்கு ஆளாகியிருந்தனர்.

நியூயோர்க் நகர வரலாற்றில், ஜூலியானி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மேயர் என்று பாராட்டிய ட்ரம்ப், கூடிய விரைவில் குணமடைய வேண்டும் என டுவீட் செய்துள்ளார்.

## ஒன்றரைக் கோடியைக் கடந்தது அமெரிக்க கொரோனா பாதிப்பு!

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்படைந்தோரின் எண்ணிக்கை ஒன்றரைக் கோடியைக் கடந்துள்ளது.

கொரோனா வைரஸின் தாக்கம் உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனா தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

அங்கு கொரோனாவின் தாக்கம் வேகமாக அதிகரித்து வரும் நிலையில், அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்படைந்தோரின் எண்ணிக்கை ஒரு கோடியே 51 லட்சத்து 59 ஆயிரத்து 529 ஆக பதிவாகியுள்ளது.

இதேநேரம், அங்கு கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2 லட்சத்து 88 ஆயிரத்து 906 ஆகப் பதிவாகியுள்ளது.

மேலும் கொரோனாவில் இருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 88 லட்சத்து 55 ஆயிரத்து 593 ஆகக் காணப்படுகிறது.

இதனையடுத்து சுமார் 60 லட்சத்துக்கும் அதிகமானோர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் சமூக அக்கறையோடு செயற்பட்டால் வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்தலாம்!

## யாழ்.மாவட்ட அரச அதிபர் கூறுகின்றார்



யாழ்ப்பாணம், டிசெ. 07

யாழ். மாவட்ட மக்கள் சமூக அக்கறையோடு செயற்படும்போது வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அனர்த்த நிலை தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

நீர் வழிந்து ஓடாத நிலைமை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது.

இதற்கு உள்ளூராட்சி சபை முயற்சி எடுத்தும் அதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பின்மை காரணமாக மக்களின் சமூக அக்கறையற்ற செயற்பாடு காரணமாக இந்நிலைமை ஏற்பட்டிருப்பது இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுமக்கள் உள்ளூர் அதிகார சபையினருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். கழிவுப்பொருள்களை வீசுதல், வடிகால்களை மூடுதல் அல்லது தேவையற்ற பொருள்களை பொது இடங்களில் வீசுதல் போன்ற செயற்பாட்டை மேற்கொள்ளும் காரணத்தாலும் வடிகால்களை சட்ட விரோதமாக தடுப்பதும் வெள்ள நீர் தேங்கும் அவல நிலை ஏற்பட காரணமாகிறது.

இந்த விடயத்தில் யாழ். மாநகர சபை மற்றும் மாநகர உத்தியோகத்தர்கள் இடர் ஏற்பட்ட பகுதிகளில் அதனை செயற்படுத்தியமையைக் காணக்கூடியதாக இருந்தது.

எதிர்காலத்தில் உடனடியாக சீர் செய்ய வேண்டியவற்றை உடனடியாகவும் ஏனையவற்றை அதனை உரியவாறு செயற்படுத்துவதற்கு உரிய தகவலைப் பெற்று அதனை செயற்படுத்துவதற்கு உள்ளோம். - எனவும் தெரிவித்தார்



இன்று நாவலர் குருபூசை தினம்.

## நல்லைநகர் பெருமானார் எல்லையிலாப் புகழடைந்தார்!

**அன்னியமாம் பேரிருளில் அகப்பட்ட சைவமதை
முன்னின்று பேரொளியாய் காத்திடவே வந்தமைந்த
நல்லைநகர் நாவலராய் நல்வரமாய் ஆறுமுகம்
எல்லோரும் மதித்திடவே பிறந்தனரே ஈழமதில்**

**கருவினிலே சமயநெறி நிறைந்தவராய் பிறந்தமையால்
கருதியது அத்தனையும் சமயநெறி ஆகியது
குறைகளைய புறப்பட்ட குறையில்லா பெருமகனாய்
நிறையறிவாய் விளங்கினரே நிமலனருள் நாவலரும்**

**நீறணிந்த மேனியராய் நெஞ்சமெலாம் சிவனினைவாய்
ஆறுமுக நாவலரும் ஆசாரம் பேணினரே
தந்தையினைக் குருவாக்கி தாம்கற்றார் பலவற்றை
ஐயமின்றி கற்பதிலே அவர்கவனம் நின்றதுவே**

**ஆங்கிலத்தைக் கற்றிட்டார் அன்னியத்தை ஒதுக்கிட்டார்
அழகுதமிழ் இலக்கணத்தை அறிந்துவிட உரைவகுத்தார்
பாமரரும் விளங்குதற்கு பாங்கான உரைநடையை
பக்குவமாய் வழங்கிட்ட வல்லாளர் ஆகிநின்றார்**

**சமயத்தை விளக்குதற்கு சரியான வழியென்று
பிரசங்க வடிவத்தை பேருரமாய் கொண்டாரே
அரனாரின் ஆலயங்கள் அரங்கமாய் ஆக்கியே
ஆறுமுக நாவலரும் அரும்பணிகள் ஆற்றிநின்றார்**

**சமயத்தை வளர்ப்பதற்கு தமிழையே கையெடுத்தார்
தமிழ்கொண்டு சைவத்தை தான்விளக்க முன்னின்றார்
கல்வியொடு ஒழுக்கமதை கற்பிக்கப் பலபள்ளி
நல்லைநகர் நாவலரும் நன்றாகத் தாபித்தார்**

**அன்னைத் தமிழோடு ஆங்கிலமும் வடமொழியும்
ஆறுமுக நாவலரின் அரணாக அமைந்ததுவே
கேட்டிடுவார் மனம்பதிய கருத்துரைக்கும் ஆளுமையால்
நல்லைநகர் பெருமானார் எல்லையிலாப் புகழடைந்தார்**

**ஈழத்தின் வரலாற்றில் இணையில்லாப் பெருமகனாய்
நல்லைநகர் நாவலரை நாடுபோற்றி நிற்கிறது
வேதமொடு ஆகமங்கள் விளங்குகின்ற சைவமதம்
நாவலரை நினைப்பதற்கு நம்சொத்தாய் அமைந்திருக்கு**

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா மெல்பேண், ஆஸ்திரேலியா

## நான்கு அமைச்சுகளுக்கான செயலாளர்கள் நியமனம் நாடாளுமன்ற உயர் பதவிகளுக்கான குழு ஒப்புதல்!

நான்கு அமைச்சுகளுக்கான செயலாளர்கள் மற்றும் ஒரு தூதுவரை நியமிப்பதற்கு நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதற்கமைய சுற்றாடல் அமைச்சின் செயலாளராக வைத்தியர் அனில் ஜாசிங்க, நீர் வழங்கல் அமைச்சின் செயலாளராக வைத்தியர் பிரியத் பாண்டு விக்ரமா, உயர் கல்வி அமைச்சின் செயலாளராக பேராசிரியர் கபிலா பெரேரா மற்றும் நீதி அமைச்சின் செயலாளராக எம்.எம்.பி.கே. மாயதுன்னேவை நியமிக்க நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு, ஒப்புதல் அளித்துள்ளது. அதேபோன்று கட்டாருக்கான இலங்கையின் புதிய தூதுவராக எம். மொஹமட்டையும் நியமிக்க நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு ஒப்புதல் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் ஒத்துழைக்காத பகுதிகளில் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தவும்

## அரச மருத்துவர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, அட்டலுகமவைப் போன்று வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ள பகுதிகளிலும் மக்களின் ஒத்துழைப்பு குறைவாகக் காணப்படுகின்ற பகுதிகளிலும் பொலிஸ் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு முழு நாட்டிலுமுள்ள மொத்த தொற்றாளர்களில் 30 வீதத்துக்கு அதிகமானோர் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ளமையால், இங்கு பாரிய அவதானம் காணப்படுவதாகவும் அந்த சங்கம் எச்சரித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே இதனை வலியுறுத்தினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்:-

ஆரம்பத்தில் அபாயமற்ற பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களில் கூட தற்போது தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர்.

கிழக்கில் சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று, புத்தளத்தில் சில பகுதிகள், இரத்தினபுரி, மத்திய மாகாணத்தில் கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தொற்றாளர்கள் இனங்காணப்படுவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

முழு நாட்டிலுமுள்ள மொத்த தொற்றாளர்களில் 30 வீதத்துக்கு அதிகமானோர் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ளனர்.

இதிலிருந்து இங்கு பாரிய அவதானம் காணப்படுகிறது என்பது தெளிவாகிறது. இவ்வாறு கொழும்பில் காணப்படுகின்ற அபாயத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, புதிதாக பண்டாரகம - அட்டலுகம பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும்.

அவ்வாறு செய்தால் மாத்திரமே தொற்றாளர்கள் தொடர்பாகப் பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் பிரதேச மருத்துவ அதிகாரிகளுக்கு முறையான தீர்மானங்களை எடுக்கமுடியும். அவ்வாறில்லையென்றால் பரவல் எந்தளவுக்குத் தீவிரமடையும் எனக் கூற முடியாது. - என அவர் மேலும் தெரிவித்தார்.

# நுவரெலியாவில் 208 பேருக்கு தொற்று பல பிரதேசங்கள் முடக்க நிலையில்!

கொரோனா வைரஸ் தாக்கத்தின் 2 ஆவது அலை ஊடாக நுவரெலியா மாவட்டத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை வரை, 208 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அம்மாவட்ட சுகாதார பணிப்பாளர் வைத்தியர் இமேஷ் பிரதாபசிங்க தெரிவித்துள்ளார்.

இதுவரை 4 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் சுமார் 311 பேர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன், வெளிஓயா தோட்டத்தில் தண்டுகள பிரிவு, பொகவந்தலாவ பொகவன பகுதியில் குயினா தோட்டம், கினிகத்தேனை பிளக்ஹோட்டர் தோட்டம் ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மறுஅறிவித்தல் விடுக்கப்படும்வரை இப்பகுதிகளில் தனிமைப்படுத்தல் நடைமுறைகள் நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் முதலாவது அலையின் போது நுவரெலியா மாவட்டத்துக்குப் பெரிதாக பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. ஓரிரு தொற்றாளர்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டனர். அதுவும் வெளியிடங்களில் இருந்து வந்தவர்கள். குறிப்பாக தோட்டப்பகுதிகளில் வைரஸ் பரவவில்லை.

எனினும், 2 ஆவது அலையான பேலியகொட கொத்தணி ஊடாக மீன்வாங்க சென்ற பலருக்கு வைரஸ் தொற்றியது. இதன்மூலம் தோட்டப்பகுதிகளிலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதன்பின்னர் தீபாவளி பண்டிகைக்காக வெளி மாவட்டங்களில் இருந்து வந்தவர்கள் ஊடாகத் தற்போது வைரஸ் பரவி வருகின்றது.

அதேவேளை முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி, கைகளைக் கழுவுதல் உட்பட சுகாதார நடைமுறைகளை தொடர்ந்தும் மக்கள் பின்பற்ற வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.12.2020 இல் வெளியிடப்பெற்றது.